May 7th 2015

# அதிகாரமும் சமூகத்தில் அதன் அவசியமும் பல்வேறு தோற்றங்களும்

உறவில் காரம் அதிகமானால் அதிகாரம் எழும். காது கேட்காதவனிடம் உரத்துப் பேச வேண்டும். தன் கடமையைத் தானே செய்யாதவனிடம் கண்டிப்பாய் பேச வேண்டும். பல முறை கேட்காவிட்டால் செய்யாதவரிடம் பேச்சு காரமாக இருக்க வேண்டும். தண்டிக்கத் தவறினால் எதுவும் நடக்காது என்றால், வேலையிடும் பொழுது தண்டனையையும் கூற வேண்டும், குடும்பம் பண்புள்ளதானால், பிரியமான குடும்பத்தில் பேச்சு இனிமையாக இருக்கும். காரம் எந்த ரூபத்திலும் அங்கு எழாது. பெரியவர்கள், அதிகாரிகளிடம் பேச நேரம் பார்த்து அவரெதிரில் வந்து மென்மையான குரலில் பேசுவது வழக்கம். அமெரிக்காவில் கணவன் மனைவியை அதிகாரியாகக் கருதுவான். I.C.S. அதிகாரிகள் அன்று உத்தரவிடும் பொழுது நிமிர்ந்து பார்க்காமல் பேசுவார்கள். அவர்கள் அனைவரும் பேசும் பாணியைப் பார்த்தால் அப்படிப் பயிற்சி கொடுத்தது போல் தோன்றும். இராணுவத்திலும் போலீஸிலும் மேலிட உத்தரவின்றி எவரும் செயல்பட மாட்டார்கள். கணவனும் மனைவியும் உள்ள இடத்தில் மனைவியை அழைத்தால் அவள் கணவனை நிமிர்ந்து பார்ப்பாள். கணவன் உத்தரவின்றி நடந்து மனைவிக்குப் பழக்கமில்லை. வீட்டிற்கு வந்த குழந்தைகட்கு பழம், சாக்கலேட் போன்ற தின்பண்டம், சிறு பரிசுகள் கொடுத்தால் குழந்தை தாயார் முகத்தைப் பார்க்கும். அதிகாரம் பெற்றோரிடம், குழந்தை தானே செயல்படாது. கொல்லை வெளியில், கட்டடம் கட்டுமிடத்தில் மெதுவாகப் பேச முடியாது. உரத்த குரலில் கூவுவார்கள். அந்த உரத்த குரலில் அதிகாரம் கலந்து எழும். பண்டார சன்னிதியை பார்க்கப் போனவர் கல்லூரிப் பேராசிரியரானாலும், சன்னிதி அவரிடம் பேச மாட்டார். அவரை ஐந்து நிமிஷம் நிமிர்ந்து பார்க்க மாட்டார். ஐந்து அல்லது பத்து நிமிஷம் கழித்து குரல் வாயிலிருந்து எழாது. கையை வீசுவார். வீச்சு போகும் பக்கம் வந்தவர் செயல்பட வேண்டும். காருகுரிச்சி அருணாசலம் T.N. ராஜ ரத்தினம் பிள்ளையின் சிஷ்யர். மதுரையில் அருணாசலம் வீட்டிற்கு வந்தவர் “பிள்ளை மதுரைக்கு வந்திருக்கிறார்” என்றார். அருணாசலம் எழுந்து நின்றார். துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டார். கைகட்டி நின்றார். தலைவர் நின்ற இடத்தைத் தொட்டுக் கும்பிட்டார். தலைவர் நாற்காலியில் தொண்டர் உட்கார்வது தமிழ் நாடறியாதது. மிராசுதார் ஊரில் இருப்பது குறைவு. நிலத்தில் வேலை நடப்பதை அவர் வந்து பார்த்து நெடுநாளாகி விட்டது. முதலாளி ஊரில் இருந்தால் நிலத்தில் வேலை அதிகமாக நடக்கும் என்பது அதிகாரத்திற்குரிய இலட்சணம். ஒருவர் அந்தஸ்த்தை எடுத்துக் கூற “அவர் பெயரைச் சொன்னால் அழுத பிள்ளை வாய் மூடும்” என்பார்கள். அதிகாரம் எழுப்புவது பயம். மறுத்து நடப்பவன் கேட்பது “என்ன தலையைச் சீவி விடுவாரா” எனக் கேட்பான். எளிய விஷயமும் மறுக்கப்பட்டால் மறுத்தவன் தலையை சீவிய காலம் உண்டு. அது 100 ஆண்டிற்கு முன் உலகில் பெரும்பாலான இடங்களில் நிலவிய நடைமுறை. இங்கிலாந்து மன்னர் அறையில் அவர் வீற்றிருப்பார். வேறு நாற்காலிகள் இருக்கா. மன்னர் உட்கார்ந்திருந்தால் அவரெதிரே உட்காரும் பழக்கம் ஆதிநாள் முதலில்லை. அமெரிக்காவில் தொழிலாளி முதலாளியைப் பெயரிட்டு அழைப்பான். White House இல் இன்றும் President நின்றால் எவரும் அவர் முன் உட்கார அனுமதியில்லை. மேல் நாட்டில் மனைவி கணவனை பெயரிட்டழைப்பாள். நம் நாட்டில் 1950 வரை கணவன் பெயரை மனைவி வாயால் சொல்ல மாட்டாள். ரயில்வே ஸ்டேஷனில் பெண் எங்களுருக்கு டிக்கட் கொடு என்றால், எந்த ஊர் என்றால் ஊர் சிதம்பரம். அவள் கணவன் பெயர் சிதம்பரம். அவளால் சொல்ல முடியவில்லை. முடிவாக “நடராஜா கோயில் உள்ள ஊர்” என்றாள். இன்று கிருஸ்துவர்கள் நம் நாட்டில் நீண்டநாளாக கணவனைப் பெயரிட்டு அழைக்கிறார்கள். இரண்டு தலைமுறை முன் அமெரிக்கப் பெண்கள் கணவன் பெயரைச் சொல்வதில்லை. நம் நாட்டில் பெயரை சொன்னால் ஆயுள் குறைவு என்பது நம்பிக்கை. உலகெங்கும் பெயர் சொல்வது மரியாதையில்லையென வெகுநாள் வரை

நம்பிக்கையிருந்தது. தகப்பனாரை இங்கிலாந்தில் அன்று Sir எனப் பிள்ளைகள் அழைத்தனர். இன்று பெயரிட்டு அழைக்கின்றனர். Papa எனவும் அழைக்கும் பழக்கம் எப்பொழுதும் உண்டு. பிள்ளைகளை அடித்து வளர்க்க வேண்டும் என்ற நம்பிக்கை இருந்த காலம் அது.

உலகம் நடைபெற பவர் வேண்டும். சமூகம், உலகம், ஊர், குடும்பம் என்பது பவர், அதிகாரம். அதிகாரம் செல்லும். ஆட்சி என்பது அதிகாரம். அரசன் வருகிறான் எனில் பரிவாரத்துடன் வருவான். கட்சித் தலைவரானாலும், ஊர் நாட்டாமைக்காரனானாலும், அதிகாரம் பரிவாரத்துடன் வரும். திருடனைப் பிடித்தால் அடிக்க கூட்டம் கூடிவிடும். கோபம் தனி மனிதனுடைய அதிகாரம். கோபம் எதிரியிடமிருந்து காப்பாற்றும். கோபப்பட முடியாதவனை ஊர் அடித்து அழித்து விடும். ஆதிநாள் அதிகாரம் பிற்காலத்து சட்டமாயிற்று. சட்டம் மரியாதையாயிற்று. மரியாதை ஒழுங்கு, முறையென நடைமுறையில் வழங்குகிறது. நம் நாட்டில் வயதிற்கு மரியாதையுண்டு. இங்கிலாந்தில் எவரும் சட்டத்திற்கு விரும்பிப் பணிவார்கள். Phileas Fogg 80 நாளில் உலகம் சுற்றி வர £20,000 பந்தியம் போட்டு புயல், கொள்ளை, கொலை, ஆபத்து, ஆகியவற்றை சமாளித்து நேரத்தில் திரும்பி வந்தபொழுது அவரைத் தவறாக சந்தேகித்து திருடன் என அரெஸ்ட் செய்த பொழுது, மறுப்பின்றி உத்தரவை Fogg ஏற்றுக் கொள்கிறார். சட்டம் என்றால் சர்க்கார். சர்க்காரைப் பணிவது முறை. எப்படி சட்டத்திலிருந்து தப்புவது என நினைப்பது இங்கிலாந்தில் இல்லை. மீரா ராணாவின் மனைவி, கணவன் விஷம் கொடுக்கிறான். கணவனுக்குப் பணிவது கடமை. மீரா விஷத்தைச் சாப்பிட்டாள். விஷம் முறிந்து விட்டது. கணவனுடைய அதிகாரம் விஷம் வைத்தாலும் செல்லும். தகப்பனார் மகனை கப்பலில் காவல் வைக்கிறார். கப்பல் பற்றி எரிகிறது. உயிருக்கு ஆபத்து. உயிருக்கே ஆபத்து வந்தாலும் தகப்பனார் உத்தரவின்றி அந்த இடத்தை விட்டு மகன் நகரவில்லை. அது அதிகாரம். சங்கரர் கங்கைக்கரையிலிருந்தார். சிஷ்யன் எதிர்க்கரையிலிருந்தார். குரு சிஷ்யனைக் கூப்பிட்டார். நதியில் இறங்கினால் உயிர் போகும். இறங்கினார். பாதம் பத்மத்தால் தாங்கப்பட்டது. பத்மபாதர் எனப்பெயர் வந்தது. வாழ்வு என்பதற்கு ஏராளமான அம்சங்களுண்டு. எல்லா வாழ்வின் அம்சங்களும் மனித உறவாலானவை. மனித உறவு அதிகாரத்தால் செயல்படுவது. நீரோட்டம் மேட்டிலிருந்து பள்ளத்திற்குப் போகும். உயரத்தில் வித்தியாசமில்லாவிட்டால் ஓட்டமில்லை. மனிதன் செயல்பட உறவு தேவை. உறவின் வித்தியாசம் அதிகாரம் எனப்படும். அதிகாரமில்லாவிட்டால் எதுவும் நடக்காது. அதிகாரமில்லாமல் காரியம் நடக்க பண்பு தேவை. பண்பு அதிகாரம் கனிந்த உயர்ந்த உணர்ச்சி. அது உணர்வால் செயல்படும் திறமையுடையது. பண்பு பிறர் உணர்ச்சியின் தேவையை அறிந்து செயல்படுவது. உடல் நலமில்லாமல் படுத்துள்ள மகன் தேவையை அறிந்து செயல்படும் தாயார் தாய்மைப்பண்புள்ளவர். அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது பாசமற்ற தாயார். தாயாருக்குப் பாசமிருந்தால் குழந்தையின் பசி அவளுக்குத் தெரியும். அவளைப் பால் நினைந்தூட்டும் தாய் என்றனர். சமூகம், ஊர், குடும்பம், ஸ்தாபனம் வேலை செய்யுமிடங்கள். வேலை நடக்க முறையுண்டு. சட்டமுண்டு. சட்டத்தைத் தானே பின்பற்றுவது திறமையான ஸ்தாபனம். சட்டத்தைப் பின்பற்ற அதிகாரம் செலுத்துவது எளிய ஸ்தாபனம். அதிகாரம் தண்டனை மூலம் செல்லுபடியாகும். அடியாத மாடு படியாது. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள். (Violence) வன்முறை, கொடுமை, கடுமை என்பவை வாழ்வின் அஸ்திவாரம். மயில் தானே இறகு போடாது. குடும்பம் தானே நடக்காது. குடும்பத்தை நடத்த வேண்டும். நடத்துவது என்றால் அதிகாரத்தை செலுத்துவது என்றாகும். அதிகாரமிருந்து அதிகாரம் செலுத்தப்படாமல் நடக்கும் ஸ்தாபன திறமையாக செயல்படும் ஸ்தாபனம். ஒரு ஸ்தாபனத் திறமை அது சம்பாதிக்கும் பணத்தால் தெரியும். இலாபம் திறமையை அளக்கும் அளவுகோல். ஒரு குடும்பம் தங்குதடையின்றி நடப்பது, பிள்ளைகள் நோய்நொடியின்றி வளர்வது, படிப்பது, வேலைக்குப் போய் திருமணமாவது குடும்பம் நல்ல அந்தஸ்தில் உள்ளது எனப்படும். குடும்பத்தை நடத்த முடியாவிட்டால் வீட்டிலுள்ளவர் நோய் வாய்ப்படுவர். பிள்ளைகட்குப் படிப்பு

வராது. கூலி வேலைக்குப் போக வேண்டும். பெண்களுக்கு முதல் தார மாப்பிளை வராது. பிள்ளைகட்கு திருமணமேயாகாது. வசதியான குடும்பம் எனில் வலிமையான குடும்பம். வலிமை அதிகாரம். அதிகாரம் செல்லுபடியானால் குடும்பம் அதனளவில் நல்லபடியாக இருக்கும். அதிகாரத்தைச் செலுத்தாமல் குடும்பம் நல்லபடியாக நடந்தால் ஒரு தலைமுறைக் குடும்பம் அடுத்த தலைமுறையில் அடுத்த உயர்ந்த கட்டத்திற்குத் தானே உயரும்.

உலகில் நாகரீகம் என்பது மனிதன் விலங்கு வாழ்விலிருந்து விலகுவது. தெய்வீக வாழ்வு இலட்சியமாகக் கருதப்படவில்லை. தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட வாழ்வை உயர்ந்த நாகரீகமான வாழ்வாகக் கருதினர். உலகம் சிருஷ்டிக்கப்பட்ட பின் இறைவனுக்கும் உலகுக்கும் தொடர்பாக அன்பை வீசி எறிந்ததாக பகவான் கூறுகிறார். Nature, Supernature என இருபதங்களைப் பயன்படுத்துகிறார் பகவான். பிரம்மம் பிரபஞ்சத்தை கடந்த நிலையில் உள்ளதை சச்சிதானந்தம், கடவுள் என்கிறோம். இயற்கை Nature என்பது சிருஷ்டியில் மறைந்துள்ள கடவுள், சிருஷ்டி பரிணாமம் (descent, ascent) என்பது மூன்று நிலைகளில் கூறப்படுகிறது God, Nature; Spirit, Matter; Super-conscient, Inconscient எனப்படும். இந்த யோகத்தின் இரகஸ்யங்களை 10 அல்லது 20 வகையாகக் கூறும்பொழுது (Nature, Supernature) இயற்கையிலிருந்து பேரியற்கையை அடைவதையும் கூறுகிறார். அது சிரமம். மனிதன் அச்சிரமத்தை சமாளிக்க அன்பு வந்தது. அதனால் God is Love அன்பே கடவுள் என்றனர். அதிகாரம் என்றால் இறைவன் இயற்கையில் வாழ்வாக செயல்படுவது. அது அதிகாரமாக ஆரம்பித்து அன்பாக முடிகிறது பொதுவாக அதிகாரத்திற்குட்பட்டவர் அதை வெறுப்பார்கள். அதிகாரத்தை அனுபவிக்காதவர் அன்பைப் பெற முடியாது. பெருங்காரியத்தை சிறு மனிதன் செய்யப் பயன்படுவது அதிகாரம். ஆயிரம் பேர் அமர்க்களம் செய்வதை 10 அல்லது 20 போலீஸ்காரர் அடக்குவார்கள். துப்பாக்கிச் சூட்டாலும் அடக்கலாம், தடியடியாலும் அடக்கலாம். போலீஸ் வந்து அமைதி காக்க ஆணையிட்டும் அதைச் சாதிக்கலாம். வெறும் மனிதனுக்கு சட்டம் அதிகாரம் கொடுப்பதால் கூட்டம் அமளியைக் கைவிட்டு அமைதியை கைக்கொள்கிறது. 10,000 ரூபாய் சம்பளம் பெறும் குமாஸ்தா 10 கோடி பணம் பட்டுவாடா செய்கிறார். அது அவரிடம் கொடுக்கப்பட்ட அதிகாரம். அதிகாரம் என்பது சமூகத்தின் மொத்த சக்தியும் உருண்டு திரண்டு செயல்படத் தயாராவது. வாட்ச்மேன் பையன் டாக்டரானான் என்றால் வாட்ச்மேன் குடும்பத்தில் அத்திறமையிருக்கிறது. சமூகம் தன் சக்தியின் ஒரு பகுதியை ஏற்கும் குடும்பத்திற்குக் கொடுத்து ஒரு இளைஞனை டாக்டராக்குவது குடும்பம் பெற்ற அதிகாரம். இளைஞன் டாக்டரானால் சம்பாதிப்பான். நாட்டிற்கு வைத்திய சேவை செய்வான். அந்த அதிகாரம் பாஸிட்டிவாக குடும்பத்தில் செயல்பட்டால் ஆயிரக்கணக்கான இளைஞரை இலட்சியவாதிகளாக்கும் தலைவராகக் குடும்பம் உருவாக்கும். பெரிய அதிகாரம் இவை. சிறிய அதிகாரம் என்ன செய்யும்? ஹாஸ்டலில் 2000 மாணவர்களிருந்தால் 4 அல்லது 5 பேர் இருக்க முடியாமல் வீட்டிற்கு வந்து விடுகிறார்கள். மீதி மாணவர்கட்கு ஹாஸ்டலில் அமைதியாக வாழும் திறமையை கொடுத்தது குடும்பம். 15 வயது பையன் வெளியே போனால் போலீஸ் அவனைத் தேடி வருகிறது, 4 பேர் வந்து வீட்டுக் கண்ணாடி ஜன்னலை உடைத்து விட்டான் என்று வருகின்றனர். குடும்பம் தரும் திறமையைப் பெறாத மாணவன் தொந்தரவுக்கு இடம் தருவான். இவனுக்கு வாழத் தெரியவில்லை, வம்பை விலை கொடுத்து வாங்குகிறான். யாரோ செய்த விஷமத்திற்கு இவன் பலியாகிறான் என்ற நிலை ஒரு சிலருக்குண்டு. குடும்பப்பயிற்சியை முறையாகப் பெற்றவனுக்கு – குடும்ப அதிகாரத்தின் பயனைப் பெற்றவனுக்கு – இது இல்லை. அன்னை சூழல் இதையே 10 மடங்கு உயர்ந்த இடத்தில் அன்பர்கட்குக் கொடுக்கிறது. இதைப் பெற்று இழந்தவர்களை போலீஸ் காரைத் தவறான இடத்தில் நிறுத்தியதாக அரெஸ்ட் செய்கிறார்கள். குடும்பம் பீதியடைகிறது. பாக்டரியில் ஸ்டிரைக். ஒரு தந்தி அன்னைக்கு அனுப்பினால் ஸ்டிரைக் வாபீஸ் ஆகிறது எனில் அது என்ன பவர்? பரீட்சையில் எல்லாம் தெரிந்த மாணவனை அனைவரும் முதலாக வருவான் என

எதிர்பார்க்கும்பொழுது சிறு வயது முதல் எழுதிப் பழக்கமில்லாததால் பயம் உடலைக் கவ்வி கை எழுத மறுக்கிறது. பத்தில் ஒரு பங்கு எழுதுகிறான். அவனுக்கு பாஸ் செய்ய முடியுமா? அவனிருந்த சூழலில் அன்னை செயல்பட்டதால் அவனுக்குப் பாஸ் கொடுத்தனர். II classல் பாஸ் செய்தான். இது சூழலின் அதிகாரம். சூழலுக்கு அதிகாரம் அன்னையிடமிருந்து வருகிறது. அந்த அன்பு (God's Love) ஒரு துளி உலகில் இறங்கினால் பூமி தாங்காது. நொறுங்கும். அந்த சக்தியே நாம் அதிகாரம், அன்பு எனவும் பண்பு எனவும் உலகம் காண்பது. கல்வி போல் அதிகாரம் உயர்ந்த பவர். கல்வியைத் தவறாகப் பயன்படுத்துவது சிரமம். அதிகாரத்தை நல்ல முறையில் செயல்படுத்துவது குறைவு. ஆனால் சமூகத்திற்கு அடிப்படையானது, அஸ்திவாரமானது, வலிமையானது, இன்றியமையாதது பொதுவாக அதிகாரம் தீண்டினால் சூடு போடுவது போலும், பட்டாக்கத்தி முனை உரசுவது போலவுமிருக்கும். கல்வி போல், பணம் போல், ஸ்தாபனம் போல், சக்தியாக செயல்படும் அம்சம் அதிகாரம்.

மனிதன் சோம்பேறி என அன்னை கூறுகிறார். அவனுக்குப் பிடிக்காதது வேலை. உடம்பு வளைந்து வேலை செய்ய ஒத்துக் கொள்ளாது. மனிதன் கடவுளுக்கு பயந்து வாழ்கிறான். "கொஞ்சமாவது பயமிருக்கா" என்பார்கள். Fear of God பயந்தால் ஞானம் வரும். உலகில் தெய்வ பக்தி என்றால் கடவுளுக்குப் பயப்படுவது. பயமில்லை என்றால் 'துளிர் விட்டு விட்டது' என்பார்கள். வேலை நமக்கு வேண்டும் குடும்பம் முன்னுக்கு வர வேண்டும், வியாபாரம் ஆக வேண்டும். மகசூல் எடுக்க வேண்டும், எலக்ஷன் வலுவாக வேண்டும் என்றால் சட்டம் போட்டு, அதிகாரத்தை செலுத்தி சாதிக்க வேண்டும், க்ஷணம் அதிகாரமில்லை என்றாலும் அனைவரும் நிமிர்ந்து நிற்பார்கள். 10 வருஷம் செய்த வேலையும் உடனே மறந்து விடும். கருமிக்கு காசு கடிக்கும் என்பது பேச்சு வழக்கு. மனிதனுக்கு வேலை ஒத்து வாராது. எனவே அதிகாரம் அவசியம். கடைசி வரை அவசியம். பாசம் குடும்பத்தில் எழ அதிகாரம் கூடாது எனில் அது பழம்பெரும் குடும்பமாக இருக்க வேண்டும். அதுவும் ஓரளவு வசதியுள்ளதாக இருக்க வேண்டும். ஒரு நாளில் நடப்பதில்லை இவை. பல நூற்றாண்டு பலனை சில ஆண்டுகளில் தருவது கல்வி. கல்வி வாழ்வின் யோகம். பல நூறு ஆண்டுகளில் ஒருவன் பெறுவதை கல்வி நாள்தோறும் தருவதைக் காண்பது கல்வியை அறிவதாகும். செயற்கையாக வைரம் செய்தால், பார்வைக்கு அது வைரமானாலும், அதன் ஜொலிப்பு இருப்பதில்லை. ஆனால் ஒட்டு போட்டு பழம் பழுத்தால் ருசி அதிகமாக இருக்கும். செயற்கையாக இன்று வரும் பட்டு போன்ற துணியை அசல் பட்டிலிருந்து பிரித்துப் பார்க்க முடியவில்லை. மொழி வல்லுநர் அறிவது ஒன்றுண்டு; ஒரு பிற மொழியை நன்கு பயின்று பேசினால் தாய் மொழியாகப் பேசுவதை விட சிறப்பாக இருக்கும். ஆங்கில உச்சரிப்பை dictionaryயிலிருந்து கற்றவர் தாய் மொழியை Oxfordல் பயின்றவரை விட சிறப்பாகப் பேசினார். செக்கோஸ்லோவாக்கிய தமிழ் பண்டிதர்கள் சங்க இலக்கியத்தை நம்மை விட நயமாகப் பாடினர். அதிகாரம் உலகம் இயங்க அவசியம், அதிகாரமில்லாவிட்டால் வேலை நடக்காது. என்றாலும் அதிகாரத்தை செலுத்தாதது நல்ல பழக்கம்.

அலெக்ஸாண்டர் டூமாஸ் எழுதிய *மான்டிகிரெஸ்டோ* கதை பேர் போனது. அவர் 400க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். அவர் நூல் என எழுதிய அனைத்தையும் எண்ணி கணக்கெடுத்தவர் அது 1328 என்றார். The Three Musketeers அவர் எழுதியவற்றில் பேர் போனது. The Count of Monte Cristo அதையும் விட படிப்பதற்கு விறுவிறுப்பானது. Thackeracy பேர்போன ஆங்கில ஆசிரியர். "9 மணி நேரம் அப்புத்தகத்தை என்னால் கீழே வைக்க முடியவில்லை" என்றார். ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் காலை 6 மணிக்கு புத்தகத்தை எடுத்தேன் இரவு 11 மணி வரை படித்தேன் என்று எழுதினார். விக்டர் ஹூகோ,டூமாஸ் சென்ற நூற்றாண்டின் சிறந்த எழுத்தாளர்கள். பெர்னார்ட் ஷா அவர்களை Dickens, Scottயை விட உயர்ந்த எழுத்தாளர்கள் எனக் கூறுகிறார். அதிகாரம், பணம், செல்வாக்கு, அந்தஸ்தைப்

பற்றி அறிய வேண்டுமானால் அவர்கள் கதைகள் உதவும். இலக்கியம் கல்வியை சுருக்கிப் புகட்டுவது, சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். 19 வயதில் கப்பல் கேப்டன் இறந்து விட்டதால் கேப்டனாக நியமிக்கப்பட்டவன் எட்மண்ட், மெர்ஸடஸ் அழகி, சிறு வயது, விஸ்வாசத்திற்குப் பேர் போன ஜாதியில் பிறந்து அனாதையான மீனவப் பெண். டாண்டேயும் மெர்ஸிடஸூம் காதலர்கள். அவர்கள் திருமணத்தன்று எட்மண்ட் கைது செய்யப்பட்டான். மெர்ஸடஸ் அவன் விடுதலையாகாவிட்டால் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தாள். பெர்னாண்ட் மெர்ஸடஸூக்கு cousin. அவளுக்காக ஏங்குபவன். அவனே எட்மண்ட் கைதானதற்குக் காரணம். கப்பலிலிருந்த டாங்லர்ஸ் தனக்கு கேப்டன் பதவியில்லை என பொய்க் கடுதாசி எழுதி எட்மண்டை சிறைக்கு அனுப்பினான். எட்மண்ட் கபடு சூது அறியாதவன். ஏன் கைது செய்யப்பட்டோம் என அறியத் துடிக்கிறான். ஒரு நாள் தரையிலிருந்து கல் பெயர்த்துக் கொண்டு நகர்ந்தது. இது சிறை. எட்மண்ட் ஆச்சரியப்படுகிறான். வயதான ஒருவர் வெளிவருகிறார். அவர் படித்த மேதாவி இவன் படிக்காதவன் ஆங்கிலம், ஜெர்மனி, ஸ்பானிஷ், இட்டாலியன் ஆகிய மொழிகளைப் பயிற்றுவிக்கிறார். அவரிடம் 100 மில்லியன் பிரான்ங்க் பணம் தங்கமாகவும், வைரமாகவும் உண்டு. அவர் இறக்கும்பொழுது அது உள்ள இடத்தை அவனுக்குக் கூறுகிறார். அது அன்று எந்த அரசனுக்கும் இல்லாத சொத்து. வயதானவர் பெயர் Faria. அவரிடம் 5000 புத்தகங்கள் உண்டு. அதன் சாரம் 150 புத்தகத்தில் உள்ளது. அவருக்கு அந்த 150 நூல்களும் மனப்பாடம். பணமும், படிப்பும் எட்மண்டுக்கு ஐரோப்பாவில் முதன்மையான இடம் தருகிறது. அவன் பாரிசுக்கு வந்த முதல் நாள் பிரபலமாகிறான். எல்லா பார்ட்டிக்கும் அவனை அழைக்கின்றனர். ஒரு பார்ட்டியில் வருபவர்கள் Count வந்து விட்டாரா எனக் கேட்கிறார். Albert அதைக் கவனிக்கிறான், எண்ணுகிறான். அவனை 17 பேர் அப்படிக் கேட்கிறார்கள். அது பணம் மட்டுமல்ல அந்தஸ்து. அதிகாரம் பணத்தின் செல்வாக்கால் உயர்ந்து அந்தஸ்தானால் உலகம் எப்படி அவர் சொல்லை மதிக்கும் என்பது இக்கதையில் விவரமாக வருவது இக்கதையை உயர்ந்த இலக்கியமாக்கியது. விக்டர் ஹூகோ, டூமாஸ் பற்றி பேசும்பொழுது அன்னை அவர்கட்கு Life knowledge சூட்சும ஞானம் உண்டு என்கிறார். அதிகாரம் தலைமுறைகளில் செலுத்தப்பட்டால் ஞானம் சூட்சுமமாகும்.

உத்தியோகம் புருஷ இலட்சணம். அதிகாரம் மனிதனுக்கு அவசியமான இலட்சணம். உலகமே, விலங்கு உலகம் உள்பட அதிகாரத்தால் ஏற்பட்டது. அரச அவையில் அரசனுக்குப் புற முதுகு காட்டக்கூடாது என்றொரு பழக்கம். அதிகாரம் அவசியம். அதிக காரமாக இருக்கக் கூடாது. காரமின்றி செல்லும் அதிகாரம் வலிமை, பலம், தெருவில் ஆண்கள் நடந்து போனால் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கும் பெண்கள் எழுந்து நிற்பார்கள். வகுப்பில் ஆசிரியர் நுழைந்தால் வகுப்பு முழுவதும் எழுந்து நிற்கும். வேறொரு ஆசிரியர் உள்ளே வந்தாலும் முழு வகுப்பும் எழுந்து விடும். ஆறுமுக நாவலர் சுவாமி இராமலிங்கம் எழுதியது அருட்பா இல்லை அதைப் பிரசுரிக்கக் கூடாது என்று வழக்காடிய பொழுது சுவாமி கோர்ட்டுக்கு வந்தார். அனைவரும் எழுந்தனர். நாவலரும் எழுந்தனர். எதிரியானாலும் உடல் உள்ள மரியாதையைத் தவறாது தரும். அமெரிக்க வகுப்புகளில் பிள்ளைகள் அலங்கோலமாக உட்காருவார்கள். அடுத்தவரை கட்டியணைத்துக் கொள்வார்கள். ஆசிரியர் பகவான் எழுதிய பகுதியை மேற்கோள் காட்டினார். வகுப்பு அமைதியாயிற்று. அதிகாரம் உள்ள சொல்லுக்கு மரியாதையுண்டு. ஆடுமாடுகளும் பெரியதற்கு சிறியது அடங்கும். கொடுப்பவன் பெரியவன், பெறுபவன் சிறியவன். அவன் கை மேலும் அடுத்தவன் கை கீழும் இருக்கும். எச்செயலிலும் பெரியது மேல் சிறியது கீழ். மாறியுள்ள நிலையை நினைக்க முடியவில்லை. சிறிய அதிகாரி பெரிய அதிகாரியிடம் உத்தரவு, லீவு பெறுகிறார். இலாக்கா தலைமை லீவு போட எவரையும் உத்தரவு கேட்பதில்லை. அவர் வெளியில் போகும் செயலுக்கு உத்தரவுக்குள்ள அதிகாரம் உண்டு. சீஃப் செகரட்டரியை பார்க்கப்போனவர் அவர் அறை முழுவதும் அதிகாரத்தால் நிரம்பியிருப்பதைக் கண்டார். அவர் ஓய்வு

பெற்றபின் பார்த்தபொழுது அதிகார கம்பீரமில்லை. அது மனிதனுக்குரியதல்ல. உத்தியோகத்திற்குரியது. கோர்பஷாவ், இந்திரா காந்தி போன்றவர்களை சந்தித்தவர் அவர் சூழலில் உள்ள Powerயைக் காணத் தவறியதில்லை. பகவானை தரிசிக்க வருபவர்கள் சற்று தூர இருக்கும் பொழுது அவரைச் சூழ்ந்துள்ள மௌனம் மிருதுவான அலைகளாக தம்மை வந்து தழுவுவதை அறிவார்கள். Walt Disneyக்குப் போகின்றவர்க்கு குப்பையை கீழே போடத் தோன்றாது. இடம் உள்ள சுத்தம் அதிகாரத்தைப் பெற்றது. “உன் சொத்தை நான் எடுத்துக் கொள்வேன். உன்னால் என்ன செய்ய முடியும் உன்னை வீட்டை விட்டு விரட்டுவேன்” என்பது முரடனுடைய அதிகாரம். இன்று அந்த அதிகாரம் அன்று போல் செல்லாது. வீட்டில் யார் எங்கு உட்கார்வது என்பதிலிருந்து ரோடில் போகும்பொழுது யார்யாருக்கு என்ன மரியாதை தர வேண்டும் என்பது வரை சமூக வரையறையுண்டு. கவர்னர் மேடைக்கு வந்தால் அங்குள்ள 30 அல்லது 40 நாற்காலிகளில் எவர் எங்கு உட்கார வேண்டும் என்பதற்கு சட்டம் உண்டு. அவர்கள் பெயர் நாற்காலியில் எழுதப்பட்டிருக்கும். டெல்லி, சென்னை சர்க்கார் விசேஷங்களில் இந்த சட்டம் Protocol எனப்படும். ஜட்ஜூக்கு எந்த இடம் சபாநாயகர் இடம் எது, மந்திரிகள் அவர்கள் பின்னால் வருவார்கள். அந்த சட்டங்கள் அதிகாரத்தைக் குறிக்கும். மாறுபவையில்லை. சட்டசபையைக் கூட்டி கட்சித் தலைவர் சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர்களை நியமிக்கும் முதற் கூட்டத்திற்கு தலைவராக Pro-tem Speaker என ஒருவரை நியமிப்பார்கள் அவரை சபையில் அதிக வயதுள்ளவராக எடுப்பார்கள். எலக்ஷன் நிலைமையைக் கண்டு நரசிம்மராவ் எலக்ஷனுக்கு நிற்கவில்லை. கட்சி அதிக இடம் பெற்று மந்திரி சபையை நிர்மாணிக்கும் நிலை எழுந்தபொழுது வயது கருதி ராவுக்கு பிரதம மந்திரி பதவி கொடுத்தனர். நேருவுக்கும் இந்திராவுக்கும் பின் இந்த 70 ஆண்டில் எவரும் 2 பீரியட் பிரதமராக இருக்கவில்லை. மன்மோகன் சிங் இருந்தார். கையெழுத்தில் புத்திசாலித்தனம், தைரியம், இரகஸ்யம், தலைமை, வலிமையைக் காண்பார்கள். மன்மோகன் சிங் கையெழுத்து தலைமைக்குரிய எந்த தகுதியையும் காட்டவில்லை. அன்னை சேவைக்கு 23,000 ரூபாய் பணம் கொடுத்தார். அன்னை சேவை அவருக்கு 2 பீரியட் பிரதம மந்திரி பதவியை அளித்தது. மனிதன் அதிகாரம் செய்ய மட்டும் விரும்புவான். தனக்கு அறிவில்லையென எவரும் ஏற்றுக் கொள்ள முன் வருவதில்லை. தானே யோசனை செய்யும்பொழுதும் அது தோன்றாது. சொத்து, பதவி, எவ்வளவு பெரியதைக் கொடுத்தாலும் கொடுத்தவரிடமே அதை ஏற்க மனிதனுக்கு மனம் வராது. அவன் வாயிலிருந்து அதை வரவழைக்க முயன்றால் எதிரான சொல் வரும். ஏனெனில் அதை ஏற்றுக் கொண்டால் அவன் தன் அதிகாரத்தை இழந்து விடுவான். அவன் மனம் அக்கருத்தை ஏற்காது, ஏற்கவே ஏற்காது. அதிகாரம் என்பது (vital power) உடல் வலிமை, அறிவில் தெளிவு, ஆத்ம சாந்தி போல் பிராணனில் (உயிரில்) உள்ள வலிமை.

> செலுத்திய அதிகாரம் தண்டிக்கும்.
> செலுத்தாத அதிகாரம் பெரும் தண்டனையை எளியதாக்கும்.
> அன்பர்கள் அதிகாரத்தை Silent Will என்று கொண்டால் புரியும். Will செலுத்தினால் பலிக்கும். Silent Will பிரம்மாண்டமாகச் சாதிக்கும்.

M.P.யிடம் வேலை செய்யும் டிரைவர், M.P.யின் அதிகாரத்தை அவனும் செலுத்திப் பார்க்கிறான். கடைத்தெரு முழுவதும் டிரைவர் அதிகாரம். டிரைவர் கட்சி அதிகாரத்தைச் செலுத்துகிறான் செல்கிறது. அன்பர் வீட்டுச் சிறுவர்களை மிரட்டுகிறான். சிறுவனுக்கு ஜன்னி வந்தது. ஜன்னி பிரார்த்தனையால் இறங்கியது. டிரைவர் அதிகாரம் பெரிய அதிகாரம். நாட்கள் சென்றன. M.P. தோற்றார். மோசடிக் கேஸில் ஜெயிலுக்குப் போனார். அவர் மகன் நிலை மோசமாகி நடுத்தெருவுக்கு வந்து இளம் வயதில் இறந்து போனான். டிரைவர் பணம் வசூல் செய்வதில் காட்டிய வேகம் வியாபாரிகளைக் கூட்டியது. தெருவில் அவனை பிரட்டிப் பிரட்டி உதைத்தனர். 40 வருஷத்திற்கு முன்

ஊரில் கார் கொஞ்சம் பேரிடமிருந்தது. காரில் போவதே குறைவு. அதுவே பெருமை. கார் வாங்கப் போகிறோம் என்பதே பிடிபடாத பெருமை. சிறிய மனிதர் அல்பமானவர்கள். வீட்டில் குடியிருந்தால் வாடகைக்கு இருப்பவரை அதிகாரம் செய்வார்கள். குறையாகப் பேசப் பிரியப்படுவார்கள். குறையிருந்தால் ஒரிழையும் விட்டுக் கொடுக்க மனம் வராது. குறையிருப்பதாக கற்பனை செய்தால் அதை உண்மையான குறையாகக் கொண்டு குத்தலாகப் பேசுவார்கள். சிறிய மனம் அல்பமானால் என்ன செய்யும் எதையெல்லாம் செய்யப் பிரியப்படும் என்று சொல்ல முடியாது. எந்த விஷயத்தை குறையாக நினைத்துப் பேசுகிறார்களோ அந்த விஷயத்திற்கு அவர்கள் உயிர் கொடுப்பதை அறிய மாட்டார்கள். கார் வரப்போவதற்கு பெருமைப்படலாம். இனிமேல் வரப்போகும் காரின் பெருமைக்கு இன்று உங்கள் வீட்டில் குடியிருப்பதால் வாடகைக்காரர் பணிந்து போக நீங்கள் நினைப்பதே அவர்கட்குத் தெரியாது. பெருமைப்பட்ட கார் சிறுமையைக் கொண்டு வந்து உயிரை எடுக்கும் என்பது வாழ்வின் சட்டம் என்று எளிய மக்கள் அறிய மாட்டார்கள். “உன் காரில் நான் உட்கார்ந்தால் அது உனக்கும் உன் காருக்கும் ஆசீர்வாதம். அந்த ஆசீர்வாதம் உனக்கில்லை” என்பதற்கு உரிய பொய்யை ஜோடித்துப் பேசினால் New York குக்குப் போனபின் 150 மைல் தாண்டி வந்த கார் “உன் வீறாப்பை” நினைவு வைத்திருக்கும். திரும்பிப் போகும். காருக்குச் சொந்தக்காரர் ஏன் என் கார் திரும்பிப் போயிற்று? என்று கேட்பார். பயணிகள் லிஸ்டில் எப்படி பெயரில்லாமல் போயிற்று. உங்கள் பெயர் இல்லாவிட்டாலும் அடுத்தவர் பெயரும் ஏன் இல்லையென வந்தவர் கேட்பார். அவருக்குரிய பதில் உங்களிடம் இருக்காது. தவறு செய்யலாம் யார் எந்த தவற்றை எந்த அளவு செய்து தண்டனையின்றி தப்பலாம் என்ற சட்டம் அனைவருக்கும் தெரியாது. இலட்சியவாதி நல்ல மனிதன். நல்ல மனிதன் எனப் பெயர் வாங்கியவர் தவறு செய்யக் கூடாது தவறு செய்ய ஆசைப்படக் கூடாது. புத்திசாலி மாணவன் நோய் வாய்ப்பட்டதால் புரொபசரிடம் சொல்லி பாஸ் போடும்படி அன்பரைக் கேட்டான். அன்பர் செய்ய விருப்படவில்லை. அன்பரின் ஆசிரியர் மாணவனைக் கூப்பிட்டு அவன் நம்பரைக் கேட்டு அவனுடைய புரொபசரிடம் சொல்லி மார்க் போடச் சொன்னார். மேலும் அவன் பெயிலான எல்லா பாடங்களிலும் மார்க் போடச் சொன்னார். பையன் பாஸ் செய்தான். இன்ஜினீயர். வேலை கிடைக்கவில்லை. Tractor பெட்டி செய்து 5 ஆண்டு விற்றான். 5ம் ஆண்டு வேலை கிடைத்தது. பையன் இலட்சியவாதி. இது போன்ற வேலைக்கும் போவதில்லை. நேரம் அப்படி. மார்க் போட்டுப் பாஸானதால் பல ஆண்டு வேலையில்லாமலிருந்தது என அவனுக்கு இந்த 85ம் வயதிலும் தெரியாது. உள்ள அதிகாரத்தை செலுத்தும் முறையுண்டு. இத்தனையும் செய்த பேராசிரியருக்கு இரண்டு பிள்ளைகள் டாக்டர்கள். ஒருவன் என்ஜீனியர். அடுத்தவனுக்கு பாரி என்ற தமிழ்ப் பெயரிட்டார். அவரை மற்ற பிள்ளைகள் போல் படிக்க வைக்க வசதியில்லை. B.Sc. ல் சேர்த்தார். ஒரு நாளும் காலேஜூக்குப் போக மறுத்தான். பரீட்சையில் உட்கார்ந்து நெம்பரைக் போட்டு பேப்பர் கொடுத்தால் பாஸ் போட்டு விடுகிறேன் எனக் கெஞ்சினார். பையன் மறுத்தான். பழி வாங்கியது பையனில்லை. “அவர் செலுத்திய அதிகாரம்.” அது இல்லாத அதிகாரம் தற்கொலை செய்து கொண்டார்.

==========

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவாற்றியவர்: திரு. நாகராஜன்
சொற்பொழிவாற்றிய தேதி: 13.12.2015